DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 40/2021
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

எதிரி ஆஜர்

| | |
|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Father Name | தேவன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06/**12**/**2022**

**முதல் விசாரணை**

**1).** நான் தற்போது காட்டு கூடலூர் வசித்து ஓட்டுநராக உள்ளேன். வழக்கில் இறந்து போன முத்தாளு எனது தங்கை ஆவார். இறந்து போன அருள் எனது மச்சான் ஆவார். கடந்த 13.06.2019 அன்று எனது தங்கை மற்றும் மச்சான் அச்சிறுபாக்கம் ரயில்வே ஸ்டேஷனில் GST சாலை அறுகே பிளேட்பார்மில் படுத்து உறங்கி கொண்டிருந்த போது ஒரு மாருதி கார் சுமார் காலை 6.30 மணியளவில் கருப்பு கம்பம் மீது மோதி பின் படுத்துக் கொண்டிருந்தவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

2). அந்த விபத்து எனது மச்சான் அருளுக்கு முது எலும்பு மற்றும் கை கால் முறிவு ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். எனது தங்கைக்கு தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது. நான் கேள்விபட்டு சம்பவ இடம் சென்று பார்த்த போது காயம் அடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலம் அருளை மதுராந்தகம் மருத்துவமனைக்கும் மற்றும் என் தங்கையை செங்கல்பட்டு மருத்துவமனைக்கும் சிக்ச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். என் தங்கை சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3). விபத்துப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் சொல்லி அருகில் இருந்தவர் எழுதி கொடுத்தார். புகாரில் எனது மச்சான் இறந்த விவரத்தையும்,

எனது தங்கைக்கு அடிப்பட்ட விவரத்தை மட்டும் தான் சொல்லியிருந்தேன் என்றார் சரிதான். எனது மச்சான் மற்றும் எனது தங்கை அச்சிறுபாக்கம் பைபாஸ் சாலையில் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் தான் புரம்போக்கு இடத்தில் வசித்தார்கள்.

4). விபத்திற்கு பிறகு அடிபட்ட நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலிசார் என்னை காவல் நிலையத்தில், மருத்துவமனையில் மற்றும் வீட்டில் வைத்து விசார்த்தார்கள். போலிஸ் விசாரணையில் இருவருக்கும் அடிபட்ட விவரத்தை மட்டும் தான் சொன்னேனா என்றால் எனது தங்கை மற்றும் மச்சானை பற்றி மட்டும் தான் கூறினேன் வேறு விவரங்கள் கூறவில்லை. வேறு நபர்களுக்கு அடிப்பட்ட விவரத்தை பற்றி சொன்னேனா என்றால் இல்லை.

5). சாட்சி மூர்த்தி, கன்னியப்பன், நாகராஜன், வெங்கடேசன், ஆனந்தபாபு ஆகியோர்களை தெரியுமா என்றால் கன்னியப்பன் மற்றும் நாகராஜன் ஆகியோரை தெரியும் மற்றவர்களை தெரியாது. எந்த போலிசார் விசாரித்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தில் விசாரித்தார். ஆய்வாளர் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். அருள் இறந்து ஒரு வாரம் கழித்து எனது தங்கை மருத்துவமனையில் இருந்து டிஸ்ஜர்ஜி ஆன பிறகு வீட்டில் வைத்து இறந்தார்.

6). எனது தங்கை இறந்த பிறகு உதவி ஆய்வாளர் வீட்டிற்கு வந்து விசாரித்தார். காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் சரியாக தெரியவில்லை. இறந்தவர்கள் எனது தங்கை மற்றும் மச்சான் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.